[1990 ஏப்ரல் 6

சேரன்மகாதேவி தொகுதியில் வீட்டுமனைப் பட்டா.

*2055. திரு. பி. எச். பாண்டியன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் சேரன்மகாதேவி தொகுதியில் இதுவரை வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டா எவ்வளவு ?

(ஆ) நிலுவையில் உள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் எவ்வளவு ?

(இ) அப்பட்டாக்கள் எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே,

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் 1947 ஆம் ஆண்டு முதல் இதுவரை 4,628 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) நிலுவையில் உள்ள இனங்கள் 25.

(இ) பாப்பாங்குடி கிராமத்தில் புல எண் 259/1ஏ தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தை நத்தமாக மாற்றி 25 பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொகுதி முழுவதும் சம்பந்தப்பட்ட கேள்வியாகும். அங்குள்ள ஜனத் தொகையில் கணிசமான அளவு ஆதி திராவிட மக்களும் வசிக்கிறார்கள், பிற்படுத்தப்பட்ட மக்களும் வசிக்கிறார்கள். குறிப்பாக நகரப் பஞ்சாயத்துகளில், பத்தமடை கிராமம், முக்கூடல் கிராமம், மேலச்சேவல் கிராமம் இதுபோன்ற கிராமங்களில் இன்னும் மனைப் பட்டாக்கள் வேண்டும் என்ற வேண்டுகோளைக் கொடுத்து இருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களிடத்தில் அந்த மனுக்களைக் கொடுத்து இருக்கின்றேன். அதை அமைச்சர் அவர்கள், இந்தக் கூட்டத்தொடர் முடிவதற்கு முன்பு, தொகுதி முழுவதும் உள்ள வேண்டுகோளை ஏற்று அவைக்கு ஒரு அறிக்கை தருவார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட கேள்வி சேரன்மாதேவியைப் பற்றியது. இங்கு வந்து உட்கார்ந்த இடத்தில் பல ஊர்களைப் பற்றிய செய்தி, தகவல்களை எனக்குத் தந்து, ஒரு அறிக்கை

1990 ஏப்ரல் 6]

தருமாறு கேட்டு இருக்கிறார்கள். நான் அறிக்கையைத் தரு கிறேன். அவருக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக அவர் கேட்க விடுபட்டுப் போன துணைக் கேள்வி என்ற அளவிலே நான் சில தகவல்களை அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். சேரன்மாதேவி தொகுதியில் 1947 முதல் இதுவரை வழங்கப் பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் 4,628. அதில் ஆதி திராவிடர் களுக்கு வழங்கப்பட்டது 2,285: பழங்குடியினர் இல்லை: இதர வகுப்பினர் 2,334. பத்தமடையைப் பற்றி கேட்டார்கள். ஒரு குறிப்பை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். பத்தமடையில் சமீபத்தில் வழங்கப்பட்ட பட்டாக்கள் 80. 1988–89-ல் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாகள் 192. 1989–90-ல் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாகள் 89. பழங் குடியினருக்கு 3: 1988-89-ல் இல்லை. இதர வகுப்பினர்களுக்கு 1988–89-ல் வழங்கப்பட்டவை 425: 1989–90-ல் 122. 1988–89-ல் மொத்தம் வழங்கப்பட்டவை 620: 1989–90-ல் 211. நிலுவையில் உள்ள இனங்கள் 25. பாப்பாங்குடியைப் பற்றிச் சொன்னார்கள். பாப்பாங்குடி கிராமப் புல எண் 259/1ஏ தீர்வை ஏற்படாத தரிசு நிலத்தை நத்தமாக மாற்ற சேரன்மாதேவி துணை ஆட்சியாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அது முடிந்ததும் 25 பேருக்குப் பட்டாக்கள் வழங்கப்படும். திரு. பி.எச்.பாண்டியன் அவர்கள் கேள்வி எழுப்ப மாட்டார் என்று நம்புகிறேன்.

9-30 மணி

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, முக்கூடல் கிராமத்தில் டாக்டர் அம்பேக்கார் காலனிக்குத் தென் புறத்தில் குடியிருக்கக் கூடிய ஏழை அரிசன, பள்ளர், மலை சாதி, குறவர் மக்கள் இன்றைக்கும் கூட நான் உங்கள் கவனத் திற்குக் கொண்டு வருகின்றேன். அந்த மனுக்களைத்தான் உங்களிடத்தில் கொடுத்தேன். ஆகவே, இன்னும் நிலுவையில் இருக்கக் கூடிய பட்டாக்கள்—இன்னும் சர்வே செய்து-இன்னும் பல பேருக்குப் பட்டா கிடைக்கிறது என்று கூடத் தெரிய வில்லை. அப்படிப்பட்ட மக்களுடைய வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தக் கூட்டத் தொடர் முடி வதற்கு முன்பு இந்த அவையில் இதுபோல ஒரு அறிக்கையை விவரமாகச் சொல்லுவார்களா என்று தெரிந்து கொள்ள ஆசைப் படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சரவர் கள் இதுபோல 234 தொகுதிகளுக்கும் சொல்வார்களா என்று அனைவரும் அறிய விரும்புகிறார்கள். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்களின் இந்தக் கேள்விக்கு நான் ஆரம்பத்திலேயே பதில் சொல்லி விட்டேன். திருப்பியும் கேட்கிறார். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துக் கொண்டு நிற்கிறேன்.